# இலங்கைத் துறைமுக அதிகாரசபை

எனது இல: எச்ஆர்டி/ரீஎன்ரீ/வெற்றிடங்கள்/2026

## அறிவித்தல்

பின்வரும் பதவிக்கு உரிய தகைமைகளையுடைய இந்த அதிகாரசபையின் நிரந்தர ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

படகுதாரர் – **Boatman** – (வெற்றிடங்கள் - கொழும்பு இயக்கப் பகுதி – 05)

சேவை வகை : பகுதியாக தேர்ச்சி பெற்ற (SS)

சம்பள வகையீடு : 10:3 (SS3) ஆரம்பச் சம்பளம் : ரூ. 35,845/=

வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூ. 365/=

ஏற்கனவே உயர் சம்பள வகையீட்டில் அமர்த்தப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் இப் பதவிக்கு தெரிவு செய்யப்படின் தற்போது இருக்கும் சம்பள வகையீடு கவனத்திற் கொள்ளப்பட்டு 10:2 (SS2) அல்லது 10:1 (SS1) வகையீட்டில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தகைமைகள் :

(அ) க.பொ.த(உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று(03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

அனுபவம்

NS சம்பள வகையீட்டில் நான்கு (04) வருட முனைப்பான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) க.பொ.த(சா.தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் மொழி, கணிதம் உட்பட்டதாக ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

அனுபவம்

NS சம்பள வகையீட்டில் ஆறு (06) வருட முனைப்பான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்.

ஏனைய கட்டாய தேவைப்பாடுகள்

i. தீயணைத்தல் மற்றும் தீயைத் தடுத்தல் தொடர்பான சான்றிதழ்.
ii. பொதுவான பாதுகாப்பு - முதலுதவி தொடர்பான சான்றிதழ்.
iii. தனிநபர் பாதுகாப்பு நுட்பமுறை தொடர்பான சான்றிதழ்.
iv. வேலைத் தளத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சான்றிதழ்.

குறிப்பு:

1. நீந்தும் மற்றும் படகு செலுத்தும் ஆற்றல்,
ii. நியம முடிச்சுக்கள் தொடர்பான அறிவு
iii. கலமொன்றினை கட்டி வைத்தல் தொடர்பான அறிவு.

ஏனையவை – சகல பதவிகளுக்கும் உரித்தாகும்.

01. கடந்த அண்மித்த மூன்று(03) வருடங்களில் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருத்தல் வேண்டும்.

02. க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகள் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் நடாத்தப்படும் துறைமுக நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி பாடநெறியை பின்பற்றியிருத்தல் வேண்டும்.

03. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கான தொழில் சார் அனுபவத்தை பரீட்சிக்கும் பரீட்சையில் (நேர்முக மற்றும் செயன்முறை) சித்தியடைதல் வேண்டும்.

04. நேர்முக பரீட்சைக் குழுவின் தீர்மானத்தின் படி அல்லது பதவிக்கு அவசியமாயின் மருத்துவ பரிசோதனையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

05. பாதுகாப்புக் காவலர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவது அவர்கள் பாதுகாப்புச் சேவையில் ஐந்து(05) வருடங்களை விடக் கூடிய சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெற்றுக்கொள்பவர்கள் ஒழுகுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த மற்றும் விஷேடமாக 1956 33 ஆம் இலக்க அரச மொழிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் தற்போது விதிக்கப்பட்டுள்ள அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படும் சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர் செயற்படுதல் வேண்டும்.

இவ்வறிவித்தலுக்கேற்ப தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை எச்ஆர்டி/ படிவம் 01 / 2026 என்ற மாதிரிப் படிவத்திற்கமைய ஒழுங்கு செய்து சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் ஊடாக 2026. 09.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பதவிக்குரிய <u>கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.</u> குறிக்கப்பட்டுள்ள திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் அல்லது வதிவிட முகாமையாளர்களினால் அவை தாமதமானதற்கான காரணங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு காரணங்கள் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (எச்ஆர்டி/ படிவம் 01 / 2026 விண்ணப்பப்படிவத்தினை உரிய தொகுதிகளிலும் மனிதவளப் பகுதியின் சேவை நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.)

**இப் பதவிக்கு எனது இல: எச்ஆர்டி/ரீஎன்ரீ/வெற்றிடங்கள் /2024 மற்றும் 2024.12.23 ஆம் திகதிய அறிவித்தலுக்கு விண்ணப்பித்தவர்களும் இந்த அறிவித்தலின் படி மேலே பதவிக்கு விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.**

இவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு சகல வகையிலும் இணங்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பமிட்டது / கே.குமாரி சிரிவர்தனகே
பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)
2026. ஆந் திகதி
மனிதவள மற்றும் நிருவாகப் பகுதி.